1990 சனவரி 20]

கலவை அரசு மருத்துவமனை.

*3557. திரு. டி. ஆர். கஜபதி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் உள்ள கலவை அரசு மருத்துவ மனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டுள்ளதை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மணி 10-10

திரு. டி. ஆர். கஜபதி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலவையில் உள்ள அந்த மருத்துவமனை முன்பு கழக அரசால் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாகத் துவங்கப்பட்டது. அதனை முந்தைய அரசு ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றி விட்டது. கலவையைச் சுற்றி இருக்கிற 30 கிராமங்களில் மருத்துவமனைகள் இல்லாததாலும், பொதுமக்கள் மிகவும் கஷ்டப்பட்டு 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் சென்ற பிறகுதான் மருத்துவமனைக்குச் செல்லவேண்டி இருப்பதாலும் அதனை அரசு மருத்துவ மனையாக மாற்றிச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டில் இது போன்ற 196 அரசு மருத்துவ மனைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அவை இப்போது ஆரம்பச் சுகாதார நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. கலவையிலுள்ள இந்த அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தை Upgraded primary Health Centre என்ற வகையில் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அப்போது 20 படுக்கை அறைகள் அங்கே கிடைக்கும் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. ஆர். கஜபதி ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 படுக்கைகள் கொண்டதாக மாற்றித் தருவதாக உறுதி அளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுதி இல்லை. பரிசீலனையில் இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

தொழிற் பயிற்சி மாணவர்களுக்குத் தமிழில் கேள்வித்தாள்.

*2127. திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிற் பயிற்சி பெறும் மாணவர்களுக்குத் தமிழில் கேள்வித்தாள் கொடுக்கும் உத்தேசம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இது புதுடில்லி வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தலைமை இயக்குநரின் ஆளுகைக்கு உட்பட்ட பொருளானதால் மாநில இயக்குநர் இது குறித்து கடிதத் தொடர்பு கொண்டுள்ளார்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ-ல் படிக்கக்கூடிய மாணவர்கள் கேள்வித் தாள்களைத் தமிழில் கொடுத்தால் ஏதுவாக இருக்கும் என்றுதான் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே கோவையிலும், தமிழகம் முழுவதிலும் கேள்வித் தாள்களைத் தமிழில் கொடுக்க அரசு முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு, திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய வாழ்வியல் பயிற்சித் திட்டத்துடன் தமிழகத்தில் இருக்கிற ஐ.டி.ஐ. இணைக்கப்பட்டுள்ளதால் புதுடில்லியில் கேள்வித்தாள்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு அங்கே இருந்துதான் அவை வருகின்றன. மற்ற எல்லா பாடங்களுக்கும் ஆங்கிலத்திலும் அதே நேரத்தில் சமூகப் பாடத்திற்கு